# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2019–ம் வருடம் ஜீன் மாதம் 28–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரஙகள் பின்வருமாறு.

## பொருட்கள்

1) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்களால் பரவும் டெஙகு நோய்கள் வராமல் தடுக்கும் பொருட்டு வீடு வீடாக சென்று கண்காணிக்கவும் கொசுக்களின் வாழ்வாதாரஙகளை அழிக்கவும் , 15 தினக்கூலி பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் துப்புரவு ஆய்வரின் 28–02–2019–ம் தியதிய குறிப்பின்படி ஏற்கனவே பணிபுரிந்து வரும் 15 DBC பணியாளர்களை 01–02–2019 முதல் 89 நாட்களுக்கு தொடர்ந்து பணியமர்த்துவதற்கும் அதற்காகும் செலவு தொகையினை பொது நிதியிலிருந்து வழஙகவும், ஊதியம் வழஙகியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதி வழஙகலாம்.

(அ2/3827/2015)

**மன்ற தீர்மானம் எண்.1460**

அனுமதிக்கப்படுகிறது.

2)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளி மாணவ மாணவியருக்கு நிலவேம்பு குடிநீர் வழஙகுவதற்கு 5Lit அளவு கொண்ட 2 டீ ரேத்தல் மற்றும் 10 Lit அளவு கொண்ட 3 டீ ரேத்தல் மற்றும் 50 சிறிய அளவு சில்வர் டம்ளர்கள் வாஙகவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 24800/–னை வருவாய் நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(அ2/2427/2016)

**மன்ற தீர்மானம் எண்.1461**

அனுமதிக்கப்படுகிறது.

3)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018—2019—ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் காணப்படும் தக்கலை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 1000 லிட்டர் திறனுடைய குடிநீர் சுத்திகரிப்பு கருவி பொருத்தும் பணிக்கு ரூ.4.05 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு 13—03—2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு பாராளுமன்றத் தேர்தல் நன்னடத்தை விதிகளின்படி 28—05—2019 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம்) | அதிகம் (சதவீதம்) |
| 1. | திரு. எம். ஜாண்ரோஸ் முளகுமூடு | 0.287 | — |
| 2. | திரு. எம். மார்ஷல் ரூபர்ட்சிங தேவதானபுரம் வேர்க்கிளம்பி | 0.30 | — |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட அதிகம் குறைவான சதவீதத்தில் கொடுத்துள்ள திரு. எம். மார்ஷல் ரூபர்ட்சிங என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு.எம். மார்ஷல் வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 001/2019/இ1)

**<u>மன்ற தீர்மானம் எண்.1462</u>**

அனுமதிக்கப்படுகிறது.

4) இந்நகராட்சியில் உள்ள பத்மனாபபுரம் அரண்மனை நுழைவு வாயில் அருகே உயர் மின் கோபுர விளக்கு அமைக்கப்பட்டுள்ளது. இதில் 4 எண்ணம் LED Flood Lamp பழுதடைந்துள்ளது. இதை சரி செய்வதற்கு இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று LED Flood Lamp 4 எண்ணம் சப்ளை செய்யவும். பணிகள் மேற்கொள்ளவும் பணி உத்திரவு வழஙகவும், இதற்கான செலவினத் தொகை ரூ.20000/—ஐ பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு— மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 772/2019/இ1)

**<u>மன்ற தீர்மானம் எண்.1463</u>**

அனுமதிக்கலாம்.

**5)** தனியார் பங்களிப்பு நிதியின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட **21** வார்டுகளிலும் தானியங்கி குடிநீர் மையம் அமைத்தல் பணிக்கு **08–03–2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தாரர் பெயர் |
|---|---|
| 1. | M/s.Aqua Revolutions<br>Thirumudivakkam, Chennai. |
| 2. | M/s. Environ India,<br>Kaliyankadu,<br>Chunkankadai. |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். **2–ல்** உள்ள நிறுவனதாரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி அற்றவையாக கருதப்பட்டது.

அதன்படி வரிசை எண். **1–ல்** உள்ள ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி வாய்ந்தவையாக கருதப்பட்டு விலைப்புள்ளி உறை **28–05–2019** அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Aqua Revolutions, Chennai என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கவும். அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழஙகியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1630/2018/இ1)**

**<u>மன்ற தீர்மானம் எண்.1464</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**6)** பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை முறையாக பிரித்து மறு சுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டு வர இந்நகராட்சி மருந்துக் கோட்டை பகுதியில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் அமைத்து இணைப்புச் சாலை மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது பணிகள் முடிக்கும் தருவாயில் உள்ளதால் மேற்கண்ட மையத்திற்கு புதிய மின் இணைப்பு (இருமுனை) பெற வேண்டியுள்ளதால் உதவி பொறியாளர் விநியோகம்–I தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகம், தக்கலை அவர்களிடம் இணைப்பிற்கான கேட்பு பட்டியல் பெறப்பட்டது. அதன்படி கேட்பு பட்டியல் தொகை ரூ.**6259/–**ஐ உதவி பொறியாளர்,

விநியோகம்—I, தக்கலை அவர்களுக்கு வழஙகிடவும் மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு— மேற்கண்ட தொகை ரூ.6259/— செலவினம் செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1021/2018/இ1)

**மன்ற தீர்மானம் எண்.1465**

அனுமதிக்கப்படுகிறது.

7) இந்நகராட்சி அலுவலக கணனி பிரிவில் உள்ள 5 KVA UPS AARGKR —யின் மூலமாக கணனி தட்டச்சு மற்றும் அலுவலக அறிக்கைகள் தயார் செய்தல் கணனி சான்றிதழ்கள் பெறப்படும் கணனி பொதுப்பணி கணனிகள் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யப்பட்டும் கணனி மற்றும் பிற முக்கிய கணனிகள் இயக்கப்பட்டு வரப்படுகிறது.

மேற்கண்ட கணனிகள் U.P.S யுடன் இணைக்கப்பட்டுள்ள 10 பேட்டரிகளுக்கு Acid மாற்றம் செய்தும் அவற்றை Service செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி நேரடியாக விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனத்தாரரிடருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| **வ.எண்.** | **நிறுவனத்தாரர் பெயர்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1. | M/S. BABIN BATTERY SERVICE NAGERCOIL | 6490/— |
| 2. | M/S. ASHVDNTEIC INVERTERS NAGERCOIL | 5310/— |
| 3. | S.R. ELECTRONICS NGERCOIL | 4602/— |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள S.R. ELECTRONICS, NGERCOIL என்ற நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழஙகவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் அவசரம் அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதையும் செலவினத்தை பொது நிதியிலிருந்து வழஙகியமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு—மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 246/2019/இ1)

**மன்ற தீர்மானம் எண்.1466**

அனுமதிக்கலாம்.

8) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட தக்கலை நாகர்கோவில் NH- 47 தேசீய நெடுஞ்சாலையில் BSNL அலுவலகம் அருகில் குடிநீர் பிரதான குழாயில் மூன்று இடங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி 120 மீட்டர் நீளத்திற்கு புதிய பிரதான குழாய் அமைக்கும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் விதி எண்.15–ன் கீழ் மேற்கொள்ளவும், அதற்காகும் ரூ. 48000/– செலவினத்தை பொது நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /19/இ1)

**<u>மன்ற தீர்மானம் எண்.1467</u>**

அனுமதிக்கலாம்.

9) இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு (21) பகுதிகளுக்கும் பகிர்மான குழாய் (ம) மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு 6.00 இலட்சம் 14–06–2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவிகிதம் | |
|---|---|---|---|
| | | அதிகம்(%) | குறைவு(%) |
| 1. | திரு. சி. சந்திரசேகர்<br>கஞ்சிக்குழி | – | 0.45 |
| 2. | திரு. வி. ஜார்ஜ் | 1.25 | – |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட குறைவான சதவீதத்தில் கொடுத்துள்ள திரு. சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்ற தீர்மானம் எண்.1468</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**10)** இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிக்கையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கதவு எண். **34/60**/A1 கொண்ட கட்டிடம் குடியிருப்பு பயன்பாட்டில் உள்ளதால் மேற்படி கதவு எண் உள்ள குடிநீர் இணைப்பு எண்.**151/1413**–ஐ வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பிலிருந்து வீட்டு குடிநீர் இணைப்பாக மாற்றம் செய்து வழஙக மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.425/2019/இ1)

**<u>மன்ற தீர்மானம் எண்.1469</u>**

அனுமதிக்கலாம்.

**11)** இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட கதவு எண்.**34/77/1** கொண்ட கட்டிடம் குடியிருப்பு பயன்பாட்டில் உள்ளதால் மேற்படி கதவு எண் உள்ள குடிநீர் இணைப்பு எண்.**151/1446**–ஐ வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பிலிருந்து வீட்டு குடிநீர் இணைப்பாக மாற்றம் செய்து வழஙக மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 378/2019/இ1)

**<u>மன்ற தீர்மானம் எண்.1470</u>**

அனுமதிக்கலாம்.

**12)**இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். TN74 6288-ற்கு கழிவு நீக்கம் செய்வதற்கு சாலையில் இயஙக முடியாத சான்று (Off Road certificate) வாஙகுவதற்கு சாலை வரி ரூ. **1575/–** நிலுவையில் உள்ளதால் மேற்கண்ட தொகையினை திரு. இராமகிருஷ்ணன் ஓட்டுநர் அவர்களால் செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.**1575/–**ஐ வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 542/2004/இ1)

**<u>மன்ற தீர்மானம் எண்.1471</u>**

அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/–
தனி அலுவலர் (ம) ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி.

//உண்மை நகல் //

ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி.